# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.126/2019

சாட்சி : PW– 1
பெயர் : திருமதி. பூவி தேதி : 20.11.2025

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( 1 முதல் 5, 7 மற்றும் 14 ம் பிரதிவாதிகள் தரப்பில்)

வழக்கு சொத்துகளில் எனது தாயாருக்கு வரவேண்டிய பாகத்தை கோரி நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது மாமாக்கள் மீதும், அவரது பிள்ளைகள் மீதும் சொத்துகளை கிரயம் பெற்ற நபர்கள் மீதும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1 ம் பிரதிவாதி எனது மூத்த தாய் மாமா என்றால் ஆமாம். அவருக்கு சக்தி, மாரியம்மாள், பழனியம்மாள் என்ற மூன்று பிள்ளைகள் ஆவார்கள். மேற்படி மூவரையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சக்தியை மட்டும் சேர்த்துள்ளேன். 3 ம் பிரதிவாதி ஆனையகவுண்டர் எனது மற்றோரு தாய்மாமா ஆவார். அவருக்கு கழியகவுண்டர், அருண்குமார், வெள்ளையம்மாள் ஆகியோர்கள் பிள்ளைகள் ஆவார்கள். வழக்கில் வெள்ளையம்மாளின் பெயரை லோகமணி என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறாகும். 7 ம் பிரதிவாதி அழகம்மாள் எனது தாயாரின் சகோதரி என்றால் சரிதான். மேற்படி அழகம்மாள் ஏற்கனவே எனது இரண்டு தாய் மாமாக்களான 1 மற்றும் 3 ம் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தார் என்று எனக்கு தெரியாது. மேற்படி அழகம்மாள் தாக்கல் செய்திருந்த வழக்கில் இவ்வழக்கின் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் சமாதானமாக சென்றுவிட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி அழகம்மாள் தாக்கல்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem.

செய்திருந்த அ.வஎண்.400/2018 என்ற வழக்கு இந்நிதிமன்றத்தில் நிலுவையில் இருந்து அவர்களால் சமாதானம் செய்து கொள்ளப்பட்டது என்றும், அதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் குறியீடு செய்துள்ளேன். அதற்கு பின்னிட்டு அழகம்மாள் அவருக்கு உண்டான பாகத்தை பொறுத்து 1 மற்றும் 3ம் பிரதிகளுக்கும், சொத்தினை கிரயம் பெற்ற நபர்களுக்கும் விடுதலை செய்து கொடுத்துவிட்டார்கள் என்றும், அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கின் 8ம் பிரதிவாதி கூவாகவுண்டர் என் அண்ணன் ஆவார். 9ம் பிரதிவாதி ராஜேந்திரன் எனது தம்பி ஆவார். எனது தாயார் பெயர் வெள்ளையம்மாள். எனது தாயாரை சங்ககிரி தாலுக்கா மேட்டுப்பாளையம் கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். 1 மற்றும் 3ம் பிரதிவாதிகளின் ஊர் சங்ககிரி தாலுக்கா சுண்ணாம்பு கரட்டுர் என்றால் சரிதான். எனது தாயார் எனக்கு 5 வயது ஆகும வரையில் மேட்டுப்பாளையம் கிராமத்தில் எனது தகப்பனாருடன் வசித்தார். அதன்பிறகு எனது தாத்தா வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார். எனது தாயாருக்கு மனநிலை சரியில்லாத காரணத்தினால் என்னையும் எனது தாயார் மற்றும் சகோதரர்களையும் எனது தாத்தா அவரது வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார். அந்த சமயம் எனது அண்ணனுக்கு 7 வயதும், எனது தம்பி கைக்குழந்தையாகவும் இருந்தார்கள். எனது தாயாருக்கு மனநிலை சரியில்லாத காரணத்தினால் எனது தகப்பனார் எங்களை துரத்திவிட்டுவிட்டார் என்றும், அதனால் எங்கள் தாத்தா அவரது வீட்டிற்கு எங்களை அழைத்து சென்றார் என்றும் சொன்னால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு எனது தகப்பனார் வேறோரு திருமணம் செய்து கொண்டார் என்றால் ஆமாம். எனது தகப்பனார் 2வது திருமணம் செய்து கொள்வதற்காக எனது தாயாருக்கும், எங்களுக்கும் சொத்துகளை எழுதி

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem.

கொடுத்தார். எங்களை எங்கள் தாய் மாமா தான் பார்த்து கொண்டார் என்றால் ஆமாம். எனக்கும், எனது சகோதரர்களுக்கும் எங்கள் தாய் மாமாக்கள் தான் திருமணம் செய்துவைத்தார் என்றால் நாங்களே செய்து கொண்டோம். நான் காட்டுவேலை செய்து வந்தேன். எனது தாயருக்கு மனநிலை சரியில்லாத காரணத்தினாலும், எனது தகப்பனார் கொடுத்த சொத்துகள் எனது சகோதரர்களிடம் இருந்த காரணத்தினாலும் எனக்கு தனிப்பட்ட வருமானம் ஏதும் இல்லை என்றும், அதனால் நானே திருமணம் செய்து கொண்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமண செலவினங்களையும், நகைகள் மற்றும் சீர்வரிசைகளையும் எனது தாய்மாமாக்கள்தான் செய்தார்கள் என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகளைதான் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். 1 மற்றும் 3 பிரதிவாதிகள் எனக்கும், எனது சகோதரர்களுக்கும் செலவினங்கள் செய்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றும், அதனால் தான் 1ம் பிரதிவாதி அவரது மகளை எனது அண்ணனுக்கு கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 3 பிரதிவாதிகள் எங்களுக்கு ஒரு ஆதரவு செய்யவேண்டும் என்பதற்காக சொத்துகளும் வாங்கி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரியுள்ள பாக விகிதாச்சாரம் சரியானது என்றால் சரியல்ல. 10ம் பிரதிவாதி மாரிமுத்து அவரது பாகத்தை பொறுத்து 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு விடுதலை எழுதி கொடுத்துவிட்டார்களா என்றால் அது எனக்கு தெரியாது. நான் விடுதலை ஆவணத்தை தாக்கல் செய்துவிட்டு இவ்வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்துகளில் 1/15 பாகம் உரிமையில்லை என்றும், எனக்கு 1/9 பாகம் உரிமை மட்டுமே உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. எனது சின்னம்மாக்கள் ஏற்கனவே ஏற்கனவே விடுதலை செய்து கொடுத்த சொத்தினையும் நான் கோரி அதிகமான

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem.

பாக விகிதாச்சாரத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 மற்றும் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்துகளை பாகம் பிரித்து கொண்டார்களா என்றால் இல்லை. அவர்கள் இருவரும் பாகம் பிரித்து கொண்டதாக நான் ஆவணம் தாக்கல் செய்திருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. 1 பிரதிவாதியும் அவரது பிள்ளைகளும் மற்றும் 3 ம் பிரதிவாதியும் அவரது பிள்ளைகளும் தனித்தனியாக சொத்துகளை தனித்தனியாக சொத்துகளை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளின் ஒரு பகுதியை 11 முதல் 14 பிரதிவாதிகள் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும் அவரது பிள்ளைகளும் சேர்ந்து ஏற்கனவே விற்பனை செய்த ஒரு சொத்தினை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதியின் மனைவி மாரியம்மாள் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றும், அவரை இவ்வழக்கில் சேர்க்காத காரணத்தினால் அவசிய தரப்பினர் சேர்க்கவில்லை என்ற அடிப்படையில் எனது வழக்கு தள்ளுபடி ஆகக்கூடியது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மற்றோரு மகள் பழனியம்மாளை இவ்வழக்கில் சேர்க்காத காரணத்தினால் அவசிய தரப்பினர் சேர்க்கவில்லை என்ற அடிப்படையில் எனது வழக்கு தள்ளுபடி ஆகக்கூடியது என்றால் சரியல்ல. 1 மற்றும் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்துகளில் பாகம் செய்துகொண்ட விவரமும், வழக்கு சொத்துகளின் ஒரு பகுதியை விற்பனை செய்த விவரமும் எனக்கு தெரியும் என்றும், இவ்வழக்கிற்காக வேண்டி தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது சுண்ணாம்பு கரட்டுரில் வசித்து வருகிறேன். என்னை திருமணம் செய்து கொடுத்ததும் சுண்ணாம்பு கரட்டுர் தான். நான் வளர்ந்ததும் சுண்ணாம்பு கரட்டுர்தான். வழக்கு சொத்துகளின் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. விஸ்தீரணம் 16 ஏக்கர் ஆகும். நான் சொல்லும் விஸ்தீரணம் பூஸ்துதியில் இல்லை

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem.

என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை பற்றிய விவரம் தெரியாமல், எனது சகோதரரின் தூண்டுதலின்பேரில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனவே எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem.

## IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.126/2019

சாட்சி : PW– 2
பெயர் : திரு . முருகன் தேதி : 20.11.2025

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( 1 முதல் 5, 7 மற்றும் 14 ம் பிரதிவாதிகள் தரப்பில்)

நான் சுண்ணாம்பு கரட்டுரில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு சாட்சி அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். வாதி இவ்வழக்கினை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார். நான் பனிமடை குட்டையில் வசித்து வருகிறேனா என்றால் ஆமாம். எனக்கு பாத்தியப்பட்டிருந்த விவசாய நிலங்களை நான் ஏற்கனவே விற்பனை செய்து விட்டேன். வீடு மட்டும்தான் உள்ளது. எனது சொத்திற்கு சக்குபந்தி எனக்கு தெரியாது. எனக்கு சொத்திற்கு கிழக்கில் வாய்க்கால் உள்ளதா என்றால் ஆமாம். மேற்கில் பெருமாள் கவுண்டர் நிலம் உள்ளதா என்றால் தெரியாது. எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் என்ன சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் என்னிடம் ரேகை மட்டும் வாங்கி கொண்டார்கள் அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதை எனக்கு சொல்லவில்லை. 1 ம் பிரதிவாதியும், 3 ம் பிரதிவாதியும் சொத்துகளை பாகம் பிரித்து கொண்டார்களா என்றால்இல்லை ஒன்றாகத்தான் அனுபவித்து வருகிறார்கள். இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem.

# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No. 126/2019

சாட்சி : PW–3
பெயர் : திரு . கிருஷ்ணன் தேதி : 20.11.2025

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( 1 முதல் 5, 7 மற்றும் 14 ம் பிரதிவாதிகள் தரப்பில்)

இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு சாட்சி அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். வாதி பிரதிவாதிகள் எனது உறவினர்களா என்றால் ஆமாம். நான் காவேரிப்பட்டியில் வசித்து வருகிறேனா என்றால் ஆமாம். எனக்கு சொந்தமான நிலம் காவேரிப்பட்டியில் உள்ளதா என்றால் ஆமாம். வழக்கு சொத்துகள் சுண்ணாம்பு கரட்டுரில் உள்ளதா என்றால் ஆமாம். காவேரிப்பட்டிக்கும், சுண்ணாம்பு கரட்டுருக்கும் சுமார் 2 கி.மீ தொலைவு இருக்கும். வழக்கு சொத்துகளின் சர்வே எண்கள் மற்றும் விஸ்தீரணங்கள் எனக்கு தெரியாது. எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் என்ன சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு வடக்கில் முருகன் மற்றும் பழனியப்பன் சொத்துகள் உள்ளது என்றால் சரியல்ல. எனது சொத்து தான் உள்ளது. ராமசாமி என்பவர் எனது தாய்மாமா ஆவார். எனது சொத்து பழனியப்பன் சொத்திற்கு வடக்கில் தான் உள்ளது என்றால் சரியல்ல. இந்நிதிமன்றத்தில் நான் அ.வ.எண்.208/2024 என்ற வழக்கை தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான சர்வே எண் மற்றும் விஸ்தீரணங்கள் எனக்கு தெரியாது. நான் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem.